(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 15 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : ரகுமான்கான்

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15.3.18

மு வி **---**

நான் தற்போது கூடல் புதுர் அன்புநகரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்த மணியை தெரியும். மணி பெங்களுரில் ஆசாரியாக வேலை பார்த்து வந்தார். **1** வருடம் முன்பு மணி இறந்து போய் விட்டார். இறந்து போன மறுநாள் எனக்கு தெரிய வந்தது. லாவன்யாவும் அவர் **4** வயது குழந்தையும் எனது வீட்டிற்கு எதிரில் குடியிருந்து வந்தனர். இறந்த மணி போன வருடம் வந்திருந்தார். மறுநாள் மணி கொல்லப்பட்டு விட்டதாக தெரிய வந்தது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது)

என்னை போலிசார் விசாரித்த போது லாவன்யா கூடல் புதூரில் குடியிருந்ததாகவும், அவர் வீட்டுக்காரர் மணி பெங்களூரில் குடியிருந்ததாகவும் மாதமொருமுறை பெங்களூரிலிருந்து லாவன்யா வீட்டிற்கு வருவார் என சொன்னேன் என்றால் சரியல்ல. மணி இல்லாத நாட்களில் எதிரி ராஜேஷ் என்பவர் லாவன்யா வீட்டிற்கு அடிக்கடி வருவதை நான் பார்த்தேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கு வி -- எதிரிகள் தரப்பில்

இல்லை.